(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **29**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 ஆகஸ்ட் 23, வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**அதிமேதகு மைத்திரிபால சிறிசேன,** இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரும்.

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** சமூக வலுவூட்டல்கள் அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீரகுமார திசாநாயக்க,** மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொலைத்தொடர்புகள் , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ முத்து சிவலிங்கம்,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ ஏ. டி.. சுசில் பிரேமஜயந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள் :*** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2018 ஓகஸ்ட் 15 ஆம் திகதி '**இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்)**' **மற்றும்** '**குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்)**' எனும் சட்டமூலங்களிலும், 2018 ஓகஸ்ட் 16 ஆம் திகதி '**சேர்பெறுமதி வரி (திருத்தம்)**' எனும் சட்டமூலத்திலும் சபாநாயகரினால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

**2. *பத்திரங்களைச் சமர்ப்பித்தல்*:** (1) பிரதிச் சபாநாயகரினால் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2015 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXV ஆம் பகுதி சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை கொள்கை ஆய்வு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல், வான்செலவுச் சட்டத்தின் பிரிவுகள் 11(1)(ஆ), 17(2) மற்றும் 31(ஈ), (உ),(ஊ), (எ) மற்றும் (ஏ) உடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 117(2) (ஐ)

ஆம் பிரிவின் கீழ் குடியியல் வான்செலவு காப்பு முகாமை தொடர்பில் போக்குவரத்து மற்றும் வான்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்பிறல் 05 ஆம் திகதிய 2065/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதிகளை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 ஏப்பிறல் 06 ஆம் திகதிய 2065/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து மேற்படி கட்டளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சர்வதேச தொடர்புகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான ஆயுள்வேத திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கைககளை சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2012, 2013, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கடற்றொழில் , நீரியல் வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கும் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்—

(i) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(ii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முகாமைப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தையும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தையும் தாபிக்கும் பொருட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் ஆக்கப்பட்டு, 1985 திசெம்பர் 24 ஆம் திகதிய 381/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்;

(iii) 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24 ஆ என்னும் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயத்தை களனி பல்கலைக்கழகத்துடன் இணைத்து உயர்கல்வி நிறுவகமொன்றாக தாபிக்கும் பொருட்டு கல்வி, உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1995 பெப்புருவரி 23 ஆம் திகதிய 859/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் அறிவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகமொன்றை தாபிக்கும் பொருட்டு கல்வி, உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1996 சனவரி 16 ஆம் திகதிய 906/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகமொன்றை தாபிக்கும் பொருட்டு கல்வி, உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1998 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 1050/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் தொழிநுட்ப நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைகழகம் என்ற நிறுவகமொன்றை தாபிக்கும் பொருட்டு கல்வி, உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2000 மார்ச்சு 03 ஆம் திகதிய 1121/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ (1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை நிலையமொன்றை தாபிக்கும் பொருட்டும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் 1987 செப்தெம்பர் 14 ஆம் திகதிய 471/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளை இல்லாதொழித்து மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2002 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 1250/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்;

(viii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடனும் கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய அறிவியலுக்கான நிறுவகத்தை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் பொருட்டு உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2008 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 1570/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றை சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகள் மற்றும் கட்டளைகள் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் கல்வி அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 24 ஆம் திகதிய 2081/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து மேற்படி கட்டளையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் :** (1) சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ அஜித் மான்னப்பெரும சார்பாக கௌரவ எம். ஏ. சுமந்திரன், அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சட்டமூலம்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்கான த அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வருடாந்த செயல்திறன் அறிக்கை;

(iv) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் ஆண்டறிக்கையும் கணக்குகள் கூற்றும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்க தகவல் திணைக்களத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கை;

(vi) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான செலசின தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள்;

(vii) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(viii) 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம். ஏ. சுமந்திரன், அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம்;

(ii) உற்பத்தி வரி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள்;

(iii) பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழான பிரேரணை; மற்றும்

(iv) வருடாந்த மதிப்பீடுகள் பற்றிய அறிமுகக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப் பொறுப்புக்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்புகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல் :**

(1) வெலிகம, கொஹுனுகமுவ, புபுதுஜய மாவத்தை "சதுட்ட" எனும் முகவரியில் வதியும் திரு. கே.பி. சரத் கருணாரத்னவினது 2018.05.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

(2) நிட்டம்புவ, கிம்புல்ஹேன வத்த, இல. 68/02 இல் வதியும் திரு. ஆர்.ஏ. செனவிரத்னவினது 2018.06.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹர்ஷன ராஜகருணா சமர்ப்பித்தார்.

(3) பட்டியகெதர, குருகுதே கிராமம், "இடமே கெதர" எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எம். ஜினதாசவினது 2018.06.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சமிந்த விஜேசிறி சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சட்டமூலத்தை மீளப் பெறுவதற்கான அனுமதி:** கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா சமர்ப்பித்த பிரேரணை,— இன்றைய தின ஒழுங்குப் பத்திரத்தில் 66 ஆம் இலக்க விடயமாகக் காணப்படும் பின்வரும் சட்டமூலத்தை மீளப்பெறுவதற்கு அனுமதி வழங்கப்படுமாக:—

"இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம்"

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சருமானவர் சமர்ப்பித்த பிரேரணை — இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பிரேரணை சபையின் அனுமதியுடன் மீளப்பெறப்பட்டது.

**7. மதுவரி (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீடுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப.12.47 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக" என கல்வி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.35 மணிக்கு கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ செஹான் சேமசிங்க தலைமை தாங்குவாராக" என கௌரவ கே.கே. பியதாஸ முன்மொழிய, கௌரவ அப்துல்லாஹ் மஹரூப் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.22 மணிக்கு கௌரவ செஹான் சேமசிங்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ மயில்வாகனம் திலகராஜா தலைமை தாங்குவாராக" என கௌரவ கே.கே. பியதாஸ முன்மொழிய, கௌரவ இஷாக் ரஹுமான் வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.21 மணிக்கு கௌரவ மயில்வாகனம் திலகராஜா தலைமை தாங்கினார்)

"கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.02 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்)

"கௌரவ மயில்வாகனம் திலகராஜா தலைமை தாங்குவாராக" என சமூக வலுவூட்டல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.34 மணிக்கு கௌரவ மயில்வாகனம் திலகராஜா தலைமை தாங்கினார். )

(பி.ப. 5.31 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார். )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 4 வரையிலான ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

இதன்படி சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்து.

**8. அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையச் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீடுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 8 வரையிலான ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

9 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 7 ஆம், 8 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடகஅமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

> "அச்சாதனங்களைப் பாதுகாத்தல், சுவடிக்கூடத்தில் இடல், நிருவகித்தல் மற்றும் காட்சிக்கு வைப்பதற்கு எல்லா";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 18 முதல் 21 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

> "(ஏ) நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், பதவிநீக்குதல் அல்லது அவர்களது சேவைகளை முடிவுறுத்தல் மற்றும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் எழுத்திலான சட்டங்களின் நியதிகளின்படி";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

> "(2) நிலையத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்து.

**9. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை ( இல.1 ):** 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 12 ஆம் திகதிய 2066/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை ( இல.2 ):** 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 24 ஆம் திகதிய 2068/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை ( இல.3 ):** 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மே 15 ஆம் திகதிய 2071/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஒத்திவைப்பு (ஜப்பானிய புலமைப்பரிசில் செயற்றிட்டம் இடைநிறுத்தம்):** “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக” என சமூக வலுவூட்டல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.48 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார். )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 6.31 மணிக்கு பாராளுமன்றம் 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப . 10.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.